# <u>அறிவித்தல்</u> B

**“இலங்கை பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்)”** எனும் தனியார் உறுப்பினர் சட்டமூலம் தொடர்பில் அறிவித்தலொன்றைச் செய்யவிரும்புகிறேன்.

இந்த சட்டமூலம் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன அவர்களினால் 2019 யூலை மாதம் 11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதோடு, அரசியலமைப்பின் 154எ(5)(அ) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அனைத்து மாகாண சபைகளுக்கும் ஆற்றுப்படுத்தப்பட்டு, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 51(2)(அ) இன் பிரகாரம் 2019 செத்தெம்பர் 11 ஆம் திகதிக்கு முன்னர் தமது மாகாண சபைகளின் கருத்துக்களை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாரும் கோரப்பட்டன.

சட்டமூலமானது ஊவா மாகாணசபையில் பெரும்பான்மை வாக்குகளினால் நிராகரிக்கப்பட்டிருப்பதாக அந்த மாகாணசபை அறிவித்துள்ளது.

ஏனைய அனைத்து மாகாண சபைகளும் கலைக்கப்பட்டுள்ளன. மேல் மற்றும் தென் மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் குறிப்பிட்ட மாகாண சபைகள் கலைக்கப்பட்டிருப்பதால் சட்டமூலம் தொடர்பில் தமது கருத்துக்களை தெரிவிக்க முடியாதிருப்பதாக அறிவித்திருக்கின்றனர்.

ஆயினும், வட மாகாண சபையின் ஆளுநரும் சபரகமுவ மாகாணசபையின் பிரதம செயலாளரும் தமது கருத்துக்களை அறிவித்திருக்கின்ற போதிலும் அவை அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்ட வழமையான நடைமுறைக்குட்பட்டதல்லதாகும்.

கிழக்கு, வடமேல், மத்திய மற்றும் வடமத்திய மாகாண சபைகள் பதிலளிக்கவில்லை.

மாகாண சபைகளின் கருத்துக்கள் கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்படவேண்டுமென நான் பணிக்கின்றேன்.